செய்தி வெளியீடு எண்: 20 நாள்: 08.01.2011

# எல்லைக் காவலர்கள், தமிழறிஞர்கள் அவர்களின் மரபுரிமையர்கள் 217 பேருக்கு தமிழக அரசின் ஓய்வூதியம்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழறிஞர்களுக்கான ஓய்வூதியம் வழங்குவது குறித்த உயர்கல்வித் துறை அமைச்சர் தலைமையிலான உயர்நிலைக் குழுக் கூட்டம் 6.7.2010 அன்று நடைபெற்றது. அந்த உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் அளிக்கப்பட்ட பரிந்துரைகளை ஏற்று, எல்லைக் காவலர்கள் 12 பேருக்கு தலா 4 ஆயிரம் ரூபாய் மற்றும் 15 ரூபாய் மருத்துவப்படி; எல்லைக் காவலர்களின் மரபுரிமையர்கள் 8 பேரின் குடும்பங்களுக்குத் தலா 2 ஆயிரம் ரூபாய் மற்றும் 15 ரூபாய் மருத்துவப்படி;

55 தமிழறிஞர்களுக்குத் தலா 3 ஆயிரம் ரூபாய் மற்றும் 15 ரூபாய் மருத்துவப்படி; தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் 142 பேரின் குடும்பங்களுக்குத் தலா 1500 ரூபாய் மற்றும் 15 ரூபாய் மருத்துவப்படி வீதம் 1.7.2010 முதல் மாதந்தோறும் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (8.1.2011) ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின் காரணமாக, எல்லைக் காவலர்கள் மற்றும் தமிழறிஞர்களின் 217 குடும்பங்கள் பயனடைகின்றன. இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 53 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

---

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.